<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 12 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வரலட்சுமி | வயது | : | 72 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 03.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கில் இறந்து போன சுரேஷ் என் அக்கா மகன் ஆவார். 04.03.2011 அன்று எனக்கு யாரோ போன் செய்தார். சுரேஷ்க்கு உடல்நிலை சரியில்லை, கடலூர் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாக சொன்னார்கள். அங்கிருந்து நாங்கள் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பே அவர் 05.03.2011 அன்று அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சுரேஷின் இறுதி சடங்கில் நான் கலந்து கொண்டேன். அவர் எப்படி இறந்தார்ள ன்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. யாரும் எனக்கு சொல்லவில்லை. இது சம்பந்தமாக கோட்டாச்சியர் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் நீதித்துறை நீதிபதி எண் 2 அவர்கள் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் அப்போதும் நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 13 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கீதா | வயது | : | 56 |
| தந்தை/கணவர் பெயர் | : | சிவராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 03.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வடலூரில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. இறந்து போன சுரேஷ் எனது தம்பி. 04 ஆம் தேதி என் கணவர் வந்து ஏதோ பிரச்சனை உன் தம்பியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளார்கள் என்று என்னிடம் கூறினார். மறுநாள் மாலை என் தம்பி இறந்துவிட்டதாக என் கணவர் என்னிடம் சொன்னார். நான் சென்று என் தம்பியை பார்க்கவில்லை. என் தம்பி சுரேஷ் எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. உடம்பு முடியவில்லை என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக கோட்டாச்சியர் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் நீதித்துறை நீதிபதி எண் 2 அவர்கள் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் அப்போதும் நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 14 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இந்திரா | வயது | : | 53 |
| தந்தை/கணவர் பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி 03.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பாண்டிச்சேரியில் வசித்து வருகிறேன். பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் என் அண்ணன். என் மாமா எனக்கு 05.03.2011 அன்று நான் பள்ளியிலிருந்து வந்த பிறகு போன் செய்தார். நான் அதன்பிறகு பாண்டியிலிருந்து கிளம்பி கடலூர் வந்தேன். ஆனால் இறந்த சுரேஷை என்னால் பார்க்க முடியவில்லை. அதனால் நான் வடலூரில் உள்ள என் மாமா வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் அண்ணனின் இறுதி சடங்கில் நான் கலந்து கொண்டேன். என் அண்ணனுக்கு உடல் நிலை சரியில்லை என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக கோட்டாச்சியர் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் நீதித்துறை நீதிபதி எண் 2 அவர்கள் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் அப்போதும் நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 15 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதிஷ் | வயது | : | 41 |
| தந்தை/கணவர் பெயர் | : | முத்து கிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 03.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பாண்டிச்சேரியில் குடியிருந்து வருகிறேன். பிரைவேட் கம்பினியல் ஆப்பரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். 11 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்து போன சுரேஷ் என் மூத்த அண்ணன். 05.03.2011 என்று என் சின்ன அக்கா இந்திரா என்பவர் எனக்கு போன் செய்து சுரேஷ் அண்ணனை விசாரணைக்காக வடலூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளதாக சொன்னார்கள். அதன் பிறகு சுரேஷ்க்கு உடல் நிலை சரியில்லை என்று கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக சொன்னார்கள். அதன் பிறகு சுரேஷ் உடல் நிலை மோசமாகி இறந்துவிட்டதாக சொன்னார்கள். எதனால் இறந்தார் என்று எதுவும் சொல்லவில்லை. இது சம்பந்தமாக கோட்டாச்சியர் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் நீதித்துறை நீதிபதி எண் 2 அவர்கள் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் அப்போதும் நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**